1987 நவம்பர் 16]

நகரப் பேருந்துகளின் தூரத்தை அதிகரித்தல்.

131—(*வினா எண் 14360) திரு. கி. வெங்கடாசலம் மற்றும் திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நகரப் பேருந்துகள் 30 கி. மீ. தூரம் இயக்கப்படுவதை 40 கி.மீ. ஆக உயர்த்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து இம்முறை அமுலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : இச் செயற் குறிப்பை அரசு நன்கு பரிசீலித்த பிறகு, தூரத்தை அதிகரித்தல் உகந்ததல்ல என்று முடிவு எடுத்துள்ளது.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைத்தல்.

132—(*வினா எண். 14756) திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையங்களில் பயணிகள் வசதிக்காக வீடியோ கேசட் பிளேயருடன் கூடிய தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையங்களில், பயணிகள் வசதிக்காக வீடியோ காசட் பிளேயர் மற்றும் தொலைக் காட்சிப் பெட்டிகள் சென்னை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் வைப்பதற்காக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு மதிப்பீட்டில் இந்த வீடியோ காசட் பிளேயர் வைக்கப் பட்டிருக்கிறது? இதனை மற்ற இடங்களுக்கும் விரிவுபடுத்த அமைச்சர் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் முக்கியமான சில பேருந்து நிலையங்களில் வைத்து, அதற்கு எப்படி பொதுமக்களுடைய வரவேற்பு இருக்கிறது என்பதைப் பார்த்து, மற்ற எல்லா இடங்களிலும் வைப்பதைப் பற்றி ஆலோசிக்கலாம். அதனுடைய மொத்த மதிப்பீடு எவ்வளவு என்ற குறிப்பு இப்போது இல்லை. அந்தந்த பகுதிக்கு ஏற்ப, அங்குள்ள பரப்பளவிற்கு ஏற்ப எவ்வளவு தேவையோ அவ்வளவு செய்ய வேண்டியிருக்கிறது.

திரு. கே. அன்பழகன் : தலைவர் அவர்களே, பொழுது போக்கு வசதிக்காக மட்டுமல்லாமல், போக்குவரத்துக் கழகங்களின் நல்ல பணிகள், மத்திய, மாநில அரசுகளின் திட்டங்கள், பல்வேறு இலாக்காக்கள் தயாரித்துள்ள துண்டுப் படங்கள் ஆகியவற்றை அந்த வீடியோ கேசட் பிளேயர் மூலமாக மக்களுக்குக் காட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அதை அமைத்து, அது செயல்பாட்டிற்கு வருகிற போது முழுமையாக மக்களுக்குப பயன்படுகிற வகையில் வேண்டிய காட்சிகள் காட்டப்படும்.

திரு. சு. சிவராஜ் : தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்திலே ஓடிக் கொண்டிருக்கிற ஆம்னி பஸ்களில்—நீண்ட தூரப் பஸ்களில்—இந்த வீடியோ வசதிகளை வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு நம்முடைய திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இயக்குகின்ற நீண்ட தூர பேருந்துகளில் இது போன்ற வசதி இல்லாத காரணத்தால் பிரயாணம் செய்கிற மக்கள் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை விட ஆம்னி பஸ்களில் பிரயாணம் செய்வதைத்தான் விரும்புகிறார்கள். ஆகவே நம்முடைய திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் இந்த வீடியோ வசதிகளைச் செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, தனியார் பஸ்கள் சிலவற்றில் அவர்கள் வைத்திருக்கிறார்கள். எல்லா பேருந்துகளிலும் இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. காரணமாக அவர்கள் ஒரே ஒரு பேருந்தை மட்டும் வைத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தால் அதை இயக்குவதற்கு, கவனிப்பதற்கு அவர்களுக்குச் சுலபமாக இருக்கிறது. ஆனால் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலே நிலைமை அப்படியில்லை. இதற்கு முன்னாலே நெடுந்தூரப் பேருந்துகள் சிலவற்றில் நாம் அந்த வசதியை வைத்திருந்தோம். அது அடிக்கடி இயங்காமல் போகிற சூழ்நிலை எல்லாம் ஏற்பட்டது. அதை மனதில் கொண்டு, அதற்காக ஆகிற செலவினங்களை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்தபோது பல கோடி ரூபாய் அளவிற்கு வருமென்ற காரணத்தால் இப்போது அது கைவிடப்பட்டிருக்கிறது.

கொட்டமுடி ஆற்றின் குறுக்கே பாலம்.

133—(*வினா எண் 14887) திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், போடிநாயக்கனூர் ஒன்றியம், பூதிப்புரம் அருகே கொட்டகுடி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?